# Gospel Truth

# காஸ்பல் ட்ருத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE-6 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் -6


## ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்

“அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது;ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்,அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரெண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன”(வெளி 12 : 1).

ஆகாயவிரிவைப் பார்த்து, பிரகாசத்துடன் ஜொலிக்கிற சிறப்புமிக்க ஒப்பற்ற மகிமையுடைய ஸ்திரீயை தரிசனமாகக் கண்ட அப்போஸ்தலனாகிய யோவான் பாக்கியமுள்ளவர். வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு தரிசனமும் முக்கியமான உண்மைகளைச் சொல்லக்கூடியதாக விளங்குகிறது.சரியோ அல்லது தவறோ ஸ்திரீ என்பது சபைக்கு அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது.ஸ்திரீ சூரியனை அணிந்திருப்பது பரிசுத்தத்தைக் குறிக்கிறது.அப்போஸ்தல சபையின் மகிமையையும் பரிசுத்தத்தையும் காட்டுகிறது.இதற்கு நேர்மாறாக, தன் புருஷனுக்கு துரோகம் செய்த ஒரு வேசியைக் குறித்த தான தரிசனமானது விசுவாசத் துரோகமுள்ள சபையைக் காட்டுகிறது. இந்த தரிசனத்திலே சொல்லப்பட்டுள்ள ஸ்திரீ சந்திரனின் மேல் நிற்கிறாள். இந்த சந்திரனானது தன் சுய வெளிச்சத்தைக் கொடாமல், சூரியனால் பிரதிபலிக்கப்படக்கூடிய குறைந்த அளவு ஒளியையே தருகிறது.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள நியாயப் பிரமாணமாகிய உடன்படிக்கைக்கு அடையாளமாகக் கருதப்படுவதே சந்திரன். நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் “நிழலாய் மாத்திரம் இருக்கிறது” (எபி 10 : 1).



## மகிமையான தேவ சபை

நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருக்கிறது (கலா 3 : 24-26). “நிகழவிருக்கும் காரியங்களுக்கு மாதிரியாக உள்ளது. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின” (யோவான் 1 : 17).

பெருமிதத்துடன் சூரியனை அணிந்திருந்தாள் அந்த ஸ்திரீ. நம் சூரியக்குடும்பத்தில் இயற்கையாக ஒளிதரக்கூடிய ஒரு மூலாதாரமே சூரியன்.இயேசுகிறிஸ்து இந்த உலகிற்கு வந்தபோது சூரியப்பிரகாசமாகிய சத்தியம் பாவஇருளை சிதறடித்தது. இயேசுகிறிஸ்துவே மெய்யான ஒளி.சத்திய ஒளியானது பாவத்தை அகற்றி, நீதிக்கும் உண்மைக்கும் நேராய் நம்மை வழிநடத்துகிறது.இந்த சத்தியசபையானது பிரகாசமுள்ள ஜொலிக்கிற உடையணிந்து, பரிசுத்தமாய் விளங்குகிறது.பழைய ஏற்பாட்டு சபையை மாற்றியமைக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

ஸ்திரீயானவள் தன் சிரசிலே பன்னிரெண்டு நட்சத்திரங்களையுடைய ஒரு கிரீடத்தை தரித்திருந்தாள்.கிரீடம் என்பது அதிகாரத்தையும்,ஆளுகையின் வல்லமையையும் காட்டுகிறது.தேவசபையானது பாவத்தினால் நிறைந்திருக்கக்கூடாது. மாறாக அது பிசாசின் தந்திரங்களை ஜெயிக்கக்கூடிய வல்லமையுடையதாய் இருக்க வேண்டும்.


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | தேவ சபை | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1கொரி 12 : 12-13 ; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**
1தீமோ 2 : 9-10 ; 1கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15 ;

முன்னதாக அப்போஸ்தலனாகிய யோவான் கண்ட இன்னொரு தரிசனம் ஏழு நட்சத்திரங்களும், ஏழு சபையின் 'தூதர்களாம்' ." ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளி 1 : 20). ஸ்திரீயின் சிரசில் தரிப்பிக்கப்பட்டிருந்த பன்னிரெண்டு நட்சத்திரங்கள் குறிப்பது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கும் தூதர்களாக பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை நியமித்து, அவர்கள் மூலமாக இயேசுகிறிஸ்துவின் சத்திய வார்த்தைகள் வந்தது.
'' ஆகையால் இனி நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" (எபேசி 2 : 19-20).

இன்று பல 'சபைகள்' இந்த உலக இச்சைகளுக்கும்,ஆன்மீக விபச்சாரத்திற்கும், வேசித்தனத்திற்கும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன.சபையானது பாவ பழக்கவழக்கங்களுக்கும், தத்துவங்களுக்கும் தம்மை ஒப்புக்கொடுத்து, அடிபணிந்து வாழும் காலகட்டத்தில் உள்ளன.பேராசையுள்ள மனிதனே தேவ வார்த்தையைக் காட்டிலும் உயர்ந்து நிற்கிறான்.இது மாதிரியான சபைகள் மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாத மணவாட்டி சபையாகும்.

நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்
(2 கொரி 11 : 2). "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்"
(எபே 5 :27). தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, மாசற்றதும், பரிசுத்தமுமாய் தன்னைக் காத்துக் கொள்ளுகிற,மகிமையுள்ள மணவாட்டியாகிய சபைக்காக நன்றி செலுத்துகிறேன்.

## காஸ்பல் ட்ரூத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 - கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின்
# தலையங்கம்

“சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும் அதின் நீதி பிரகாசத்தைப் போலவும் அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படுமட்டும் அமராமலும் இருப்பேன் ” (ஏசா 62 : 1).

இந்த இதழில் சபையைப் பற்றிப் பார்ப்போம்.ஒவ்வொருவரும் உண்மையான தேவசபையை அறிந்து செயல்பட வேண்டும் என்பதே என் உள்ளத்தின் வாஞ்சை.பெரும்பாலான சமய அமைப்புகளும், ஐக்கியங்களும் இயேசுகிறிஸ்து போதித்தது போல, ஜனங்கள் தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு செல்ல விடாதபடி சத்தியத்தை அறிவித்து வருகிறார்கள்.இயேசுவுக்கு ஊழியஞ்செய்வது குறுகலான பரிசுத்தமான நேரான வழி.அதுதான் வல்லமைக்கும் ஜெயத்துக்குமான வழி.சத்திய சபையினை நம் வாழ்விலும் ஐக்கியத்திலும் அறிந்து உணர்ந்து கொள்ளும்போதுதான் “ஆவியோடும்,உண்மையோடும்” விடுதலையாய் அவரை ஆராதிக்க முடியும்.

பல ஜனங்கள் தாங்கள் ஒரு மனிதனைச் சார்ந்த சபையில்தான் அங்கம் வகிக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.ஆனால் வேதத்தை தியானிக்கும் போதுதான் தெளிவாகத் தெரிகிறது பல சபைகள் உண்மையாக கர்த்தரைச் சார்ந்து இல்லை.கர்த்தர் தம்முடைய சபையைக் குறித்து தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்.அதை மாற்றுவதோ அல்லது நவீனமயமாக்குவதோ வேலையல்ல. தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பதே நம் வேலை.‘தேவசபை’ யானது பிரகாசமும், அழகாய் ஜொலிக்கிறதுமாயிருக்கிறது. சீயோன் மலையைப் போல பர்வதங்களுக்கு மேலாக ஸ்தாபிக்கப்பட்டு, மாயமுள்ள இந்த உலகத்தின் குழப்பங்களைக் கடந்து மேலாக நிற்கிறது.

மனிதனுடைய பேராசையிலிருந்தும், பாவத்திலிருந்தும், சமயம் சார்ந்த மரபிலிருந்தும் விடுதலையடையவும் ஆசீர்வாதத்தையும் நமக்குத் தந்திருக்கிறார்.சத்திய வார்த்தைகளைக் குறித்ததான மேலோட்டமான அறிவு போதாது.சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தை கலங்கமற்றதாக நாம் காத்துக் கொள்ள வேண்டும்.பல சபைகள் தங்களை ‘தேவசபை’ என்று கூறிக்கொண்டு, பெயரளவிலே சபையாக உள்ளனர்.அச்சபையை பரிசுத்த ஆவியானவர் நடத்தி செல்கிறாரா அல்லது மனிதனால் நடத்தப்படுகிறதா.நமக்கு ஆதாரம் பரிசுத்த வேதாகமமா? அல்லது ஊழியக்காரரின் போதனைகளா?கிறிஸ்தவர்களிடையே பதவிக்குப் போட்டி போட்டுக்கொண்டு யார் பெரியவர் என்ற எண்ணம் தலைவிரித்தாடுகிறது.கிறிஸ்துவை தலைவராக எண்ணுவதில்லை.மலைமேல் உள்ள பட்டணம் மறைந்திருக்க மாட்டாதது போல ,நம் சுயத்தை சாகடித்து உண்மைக் கிறிஸ்தவனாய் தேவனுக்காய் எழுந்து பிரகாசிக்க தேவன் நமக்கு அருள்புரிவார்

நம் விசுவாசமும், பற்றுறுதியும் கடந்த நிகழ்வுகளையும் தற்போதுள்ள வாழ்க்கை சூழ்நிலைகளையும் சார்ந்ததாக இருக்க கூடாது.உண்மையான தேவசபையைச் சார்ந்த ஜனங்களும் சில வேளைகளில் அவ்வாறே காணப்படுகிறார்கள்.தேவசபையில் இருக்கிற நம் உள்ளத்தில் உண்மையான மாற்றம் உண்டாக வேண்டும்.நம் பற்றுறுதி தேவன் பேரிலும்,அவருடைய சத்திய வார்த்தையிலும் மாத்திரமே என்றும் நிலைத்து நிற்க வேண்டும்.அதுவே நாம் அனுதினமும் பரிசுத்தமாய் வாழ நம்மை தூண்டுகிறது.

தேவனுடைய வழிகாட்டுதலின்படி ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பற்றி வரும் இதழ்களில் காணலாம்

உண்மையாயிருங்கள் சகோதர சகோதரிகளே ! தேவன் அதிசீக்கிரமாய் வரப்போகிறார்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

## கர்த்தர் ஒருவரே

ஒரே சரீரமும்

ஒரே ஆவியும்

ஒரே கர்த்தரும்

ஒரே விசுவாசமும்

ஒரே ஞானஸ்நானமும்

ஒரே தேவனும்

ஒரே பிதாவுமுண்டு

எபேசி 4 : 4-5
2 தீமோ 3: 16-17
எபேசி 3 : 14-15

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : தேவசபை

**வேத வாசிப்பு**

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் அப் 2:47

**விளக்கம்**

கிறிஸ்துவால் தொடங்கப்பட்ட தெய்வீக அமைப்புதான் 'சபை'. தேவ ஆவியானவரால் நடத்தப்பட்டு விசுவாசத்தில் உறுதியாக கட்டப்பட்டது. வேதத்திலே இரட்சிக்கப்பட்டவர்கள் சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

**வரையறை**

சபை என்கிற வார்த்தை கிரேக்க வார்த்தையான '**எக்லேசியா**' இதன் அர்த்தம் 'சபை' அல்லது 'வெளியே அழைத்தல்'.

**I. நிறுவனர் மற்றும் கட்டியவர்**

**A.** மத் 16 : 15-18 என் சபையைக் கட்டுவேன்
**B.** எபி 8 : 1-2 மனுஷரால் அல்ல

**II. அஸ்திபாரம் & வாசல் - இயேசுகிறிஸ்து**

**A.** 1கொரி 3 : 9-11 அஸ்திபாரம்
**B.** எபே 2 : 20 இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்
**C.** யோவான் 10 : 7-9 நானே வாசல்

**III. அவயவங்கள்/ அங்கத்தினர்**

**A.** அப் 2:46 -47 இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்
**B.** 1 கொரி 1 : 2 பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்
**C.** 1 கொரி 12 : 18 தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.
**D.** 1 யோவான் 5 : 18 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்

**IV. ஜீவ புஸ்தகம்**

**A.** லூக் 10 : 20 உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறது
**B.** பிலி 4 : 3 ஜீவபுஸ்தகம் (வெளி 20:12)

**V. தலையாகிய கிறிஸ்து**

**A.** எபே 1 : 22 சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலாக தலையாகத் தந்தருளினார்
**B.** எபே 5 : 23-24 கிறிஸ்து சபைக்குத் தலை (எபே 4 : 15-16)
**C.** கொலோ 1 : 17-19 அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்
**D.** ஏசா 33 : 20-22 கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி. கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர்

**VI. சமயம் அல்லது விசுவாச சட்டம்**

**A.** 2தீமோ 3 :16-17 வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது
**B.** 2பேது 1 : 21 தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள்

**VII. ஸ்தாபனம்**

**A.** 1கொரி 12 : 18, 27-28 தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்
**B.** எபேசி 4 : 10-13 கிறிஸ்துவினுடைய ஈவு
**C.** 2கொரி 3 : 5-6 புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்

**VIII. வேதாகமப் பெயர்**

**A.** எபேசி 3 : 14-15 நம்முடைய **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**
**B.** அப்போ 20 : 28 உங்களை கண்காணிகளாக வைத்த சபை
**C.** 2கொரி 1 :1 கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபை (1தெச 2 : 14)

**IX. ஒரே சபை**

**A.** ரோமர் 12 : 4-5 அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரம்
**B.** எபே 4 : 4-6 ஒரே நம்பிக்கை
**C.** 1 கொரி 12 : 12-14,20 சரீரம் ஒன்று, அவயவங்கள் அநேகம்

**X. சபை வரையறை**

**A.** எபேசி 1 : 22-23 கிறிஸ்துவின் சரீரம்
**B.** 2கொரி 11 : 2 கிறிஸ்துவின் மணவாட்டி சபை
**C.** எபி 12 : 22-23 சீயோன் மலை, ஜீவனுள்ள தேவனுடைய நகரம் - பரம எருசலேம்
**D.** 1 தீமோ 3 : 15 சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது.

# தேவசபை

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**சபை கர்த்தருடைய தெய்வீக அமைப்பு**

சபையைக் குறித்ததான இயேசுகிறிஸ்துவின் வாஞ்சையும், நோக்கமும் தவறான உபதேசங்களைக் கொண்ட கிறிஸ்தவ சமுதாயத்திற்கு சத்தியத்தை வெளிப்படுத்துவதே. பலவிதமான நம்பிக்கைகளையும், சபைப்பாகுபாடுகளையும் கொண்ட உலகம் அழிக்கப்பட வேண்டும். உலகில் இன்று அநேக ஜனங்கள் தங்கள் ''சொந்த விருப்பத்திற்கேற்ற'' சபைகளைச் சார்ந்து அதற்கேற்றபடி நடக்கிறார்கள். ஆனால் வேதம் சொல்லுகிறது

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது (மத்தேயு 7 : 13-14).

**சபை வரையறை**

முதன்முதலில் சபை என்கிற வார்த்தை வேதாகமத்தில் மத்தேயு 16 : 18 ல் " ... இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

சபை என்கிற வார்த்தை **எக்லேசியா** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு 'அழைக்கப்பட்டது' என்று பொருள் . அப்போ 2 : 47 ல் "மறுபடியும் சபை என்கிற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது.



இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்". ஒரு சபை என்பது தேவனை ஆராதிப்பதற்கான சாதாரண ஒரு இடமோ அல்லது கட்டிடமோ கிடையாது. மாறாக பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களைக் கொண்ட ஒரு இடமாகும். உண்மையான தேவபிள்ளைகள் உலகமும் மத வேறுபாடுகளுமாகிய பாவங்களற்றவர்களே. அவர்கள் தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கிறார்கள். ஆவியில் அனலாகவும், சத்திய வழியில் நடக்கிறவர்களாகவும், சத்திய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்கிறார்கள்

**உண்மையான தேவசபையின் அவயவங்கள்**

ஒரு சபையின் அங்கத்தினர் என்பது, சபையின் உறுப்பினர் சான்றிதழைக் கொண்டோ அல்லது ஆராதனைகளில் கலந்து கொள்வதாலோ தீர்மானிக்கப்படாது. தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் (1 கொரி 12 : 18 ). இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம் பாவமுள்ள சரீரம் சுத்தமாகி, பாவமற கழுவப்பட்டு மறுபடி அவருக்குள் பிறக்கும்போதுதான் தேவசபைக்குள் அங்கம் வகிக்க முடியும். தேவ சபையிலுள்ள ஒவ்வொருவரும் பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும்.

**இயேசுவே (நானே) வாசல்**

இயேசுகிறிஸ்து ஒருவரே பாவங்களை மன்னிக்கும் அதிகாரமும் வல்லமையும் கொண்டவர். "...அவரே வழி. என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்..." (யோவான் 10 : 9).

இப்படிப்பட்டதான வல்லமையும் அதிகாரமும் உடைய போதகருமில்லை. குருவானவருமில்லை. ஊழியக்காரருமில்லை. ஆகவே எந்தவொரு மனிதனுக்கும் சபைக்குள் நம்மை சேர்க்கவோ அல்லது சபையிலிருந்து நம்மை நீக்கவோ அதிகாரமில்லை

### தெய்வீக அமைப்பு

**சபை என்பது கட்டிடமல்ல. மாறாக இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய ஒரு ஐக்கியம்**

உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறது (லூக் 10 : 20). அவர்களுடைய நாமங்கள் (பெயர்கள்) ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது (பிலி 4 : 3). ஒவ்வொருவரின் இருதயத்தையும் சோதித்தறிகிற

கர்த்தராலே நம்முடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டு ஆயத்தம் பண்ணப்பட்டுக் கொண்டேயிருக்கிறது

**கிறிஸ்துவே தலைவர்**

தேவசபையை ஏற்படுத்தியவரும், ஆயத்தம் பண்ணினவரும் இயேசுகிறிஸ்துவே. இந்தக் கல்லின்மேல் " ...என் சபையைக் கட்டுவேன்" (மத் 16 : 18). உலகப்பிரகாரமாக ஒரு சபையின் நிறுவனராக ஒரு மனிதனைக் குறிப்பிடுவது உண்மையான தேவசபையல்ல.

இயேசுகிறிஸ்துவின் 30 வது ஆண்டில் அவர் இந்த பூமியிலே தம் சபையை ஸ்தாபித்தார்.கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு (எபி 8: 1-2). அவர் மரித்து, உயிர்த்து, ஆவியானவராலே பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதினிமித்தமாக விசுவாசிகளாகிய நாம் அவருக்குள் பரிசுத்தமாய் வாழ வழி செய்திருக்கிறார்

**கிறிஸ்துவே அஸ்திபாரம்**

" போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமலும் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1கொரி 3 : 11 ). வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.

தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் (2 தீமோ 3 : 16-17). அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்

பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. தேவசபையிலே கமிட்டி அங்கத்தினர்களோ அல்லது குருமார்களாலோ அதன் ஒழுங்கமைப்பு தீர்மானிக்கப்படுவதில்லை



இயேசுகிறிஸ்து ஏற்கனவே எல்லாவற்றையும் முன்குறித்து, ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார்.

**கிறிஸ்துவுக்கு நிகர் ஒருவருமில்லை**

"...அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர், எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் "

(கொலோ 1 : 18 ). வானத்திலும் பூமியிலும் அவருக்கு நிகர் எவருமில்லை."கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர்.கர்த்தர் நம்முடைய ராஜா.அவர் நம்மை இரட்சிப்பார்" (ஏசா 33 : 22). தேவசபையிலே தலைமைப்பொறுப்புக்கான பதவியை தெரிந்தெடுக்க தேர்தல் அவசியமில்லை.ஏனெனில் எல்லாவற்றிற்கும் மேலானவர் அவர்.

**ஊழியக்காரர்களை நியமிப்பவர்**

''தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரி 12 : 18). "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிஷேச ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்கும்"

(எபேசி 4 : 10-13). ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கிருபை வரமாகிய ஈவை அளித்திருக்கிறார்.ஒருவரை பதவியில் நியமிக்க மனுஷன் முயற்சிக்கிறான்.

ஆனால் இயேசுகிறிஸ்துவின் சபையாகிய சரீரத்திலே, ஆவியானவரின் வழிகாட்டுதலே தலையாயது.தேவ அபிஷேகமும், வழிநடத்துதலும் கல்வி ஞானத்தினாலோ அல்லது பட்டப்படிப்புகளினாலோ வருவதில்லை. தேவ அழைப்புக்கு பாத்திரவான்களே நியமிக்கப்படுவார்கள்.

**இயேசுதாமே சபைக்கு பெயரிட்டார்**

கிறிஸ்தவ சமய உட்பிரிவுகளிலே பல்வேறுவிதமான பெயர்கொண்ட சபைகளை காணமுடிகிறது.ஆனால் தேவாதி தேவன் தம் ஜனங்களை முன்குறித்து அறிந்திருக்கிறார்.இதினிமித்தம் " நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும்

நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு..." (எபேசி 3 : 14-15). ஆவிக்குரிய குடும்பத்துக்கும் பிதா ஒருவர் தவிர வேறொருவரும் நாமகாரணரல்ல.

தமது சபையை மேய்ப்பதற்கு - அப்போ 20 : 28. இதற்காகத்தான் கர்த்தராகிய தேவன் கண்காணிகளை ஏற்படுத்தியிருக்கிறார்.வேத அடிப்படையில் உண்மையான சபை என்பது தேவசபை.இந்த உலகிலே 2 கொரி 1 : 1 ல் குறிப்படப்பட்டுள்ளது போல

கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபை என்பது போலவே விசுவாசிகளாகிய நாம் சபையின் பெயருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோமே தவிர அது தேவசபையா என்பதை கருதுவதில்லை.சபையின் பெயரால் நாம் ஒருபோதும் இரட்சிக்கப்பட முடியாது.

**ஒரேயொரு சபை**

இன்று அநேக சபைகளும், பிரிவினைகளும் இருப்பினும் கர்த்தர் ஒரு சபையை ஸ்தாபித்திருக்கிறார்.அதுதான் இயேசுகிறிஸ்துவின் 'சரீரமாகிய சபை' (எபே 1 : 22-23). "எப்படியெனில் சரீரம் ஒன்று.அதற்கு அவயவங்கள் அநேகம்.ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" (1கொரி 12 : 12). நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் (2கொரி 11 : 2). அவர் ஒரே மணவாட்டி சபையை உடையவர்

இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் தேவசபைக்கும், மனுஷர்களின் கைவேலையினால் உண்டாக்கப்பட்ட சபைக்குமான வித்தியாசத்தை உணர்ந்திருப்பீர்கள்.மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது (மத் 5 : 14).

தேவசபை தேவனுடையது-பரிசுத்தமானது, மாசற்றது சத்தியமானது.கிறிஸ்துவே ஸ்தாபகர், வழிகாட்டி, நியாயாதிபதியும், இரட்சகரும் அவரே.

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** நான் செல்லும் சபையில் வேதத்திலுள்ள அனைத்து சத்தியங்களையும் முழுவதுமாக போதிப்பதில்லை.இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.

**பதில் :** அநேக ஜனங்களின் கேள்வி இது.முதலாவது நம் சபை, தேவனுடைய பரிசுத்த சபையா என தெரிந்து வைத்திருக்க வேண்டும். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப் 2 : 47). வசனத்தின்படி நம் சபை ஆவிக்குரிய வளர்ச்சி பெற்றுள்ளதா என கவனிக்க வேண்டும்

சபையின் பெயரோ அல்லது சபை ஆராதனைகளில் கலந்து கொள்வதாலோ நாம் தெய்வீக அன்பை பெற முடியாது.உலக முழுவதுமுள்ள ஜனங்களனைவரும் தங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, அவரை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே தேவனுடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஜனங்கள் தங்களுக்கென்று ஒரு சபைப்பெயரை வைத்துக்கொண்டு அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால் தேவன் அதை அங்கிகரிப் பதில்லை. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒருவனே தேவசபைக்கு பாத்திரவான்.

ஒரு சபையோ அல்லது ஐக்கியமோ சத்தியத்தை சரியாக போதிக்காவிடில் அது ஜனங்களின் ஆத்தும சீர்குலைவுக்குக் காரணமாகிறது.

எல்லா சபைகளிலும், அவர்களுடைய போதனைகளினிமித்தம் ஜனங்கள் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுதான் வருகிறார்கள்.

ஆனாலும் அதே ஐக்கியத்தில் தொடர்ந்து வளர முடியாமல் ஆவிக்குரிய வாழ்வில் சரிவு உண்டாவதும் கூட ஒருவித சரியான வழிகாட்டுதலற்ற போதனையினாலும் கூட இருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் சத்திய வார்த்தைகளை ஆராய்ந்து உணராதவாறு போதிக்கப் படுகிறார்கள்.

இவ்வாறான சபைகளை பாபிலோன் அல்லது குழப்பவாத சபை எனலாம்.வெளிப்படுத்தின விசேஷத்தில் வேசியின் மக்கள் என்று அடையாளப்படுத்தி காட்டப் பட்டுள்ளது. அவர்கள் பரிசுத்த ஆவியானவர் தங்களை வழிநடத்த அனுமதிப்பதில்லை.மாறாக அவர்கள் தங்களுக்கென்று வகுத்துள்ள கொள்கைகளே



**நான் தவறான சபையில் ஐக்கியம் வைத்துள்ளேனா ?**

வேதத்தைக் காட்டிலும் மேலோங்கியிருக்கும்.திருச்சபை கமிட்டி அங்கத்தினர்கள் ஆவியானவரின் இடத்தில் தங்களை வைத்துக்கொள்கிறார்கள்.தவறான இந்த அமைப்பை தேவன் அனுமதிப்பதில்லை. என் ஜனங்களே...அவளைவிட்டு வெளியே வாருங்கள் (வெளி 18 : 4).

உண்மையான கிறிஸ்தவத்திற்கு எதிராக சாத்தான் போராடி தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறான்.

சபைகளை நேரடியாக தாக்கி துன்புறுத்தியோ அல்லது புறசமயத்தார் மூலமாகவோ அவனுடைய கிரியையை நடப்பித்துக்கொண்டிருக்கிறான். அதுபோல சபைகளிலும் கூட வேதத்திற்கு புறம்பான காரியங்களை போதித்து வருகிறார்கள்.வேதத்தின் சத்தியங்களை ஆழ்ந்து அறிந்து முழுமையாக அதை போதிக்காமல், மேலோட்டமாக போதிப்பதாலும் கூட சில வேளைகளில் எதிரியானவன் ஜனங்களிடையே அதைப் பயன்படுத்தி கிரியை செய்ய ஏதுவாகி விடுகிறது.தேவன்தாமே தம் ஜனங்களை தவறான உபதேசங்களினின்றும், தீர்க்கதரிசனங்களினின்றும் வேர்பிரித்தெடுத்து நம்மைக் காக்க வல்லவராயிருக்கிறார்.பல சபைகளின் அஸ்திபாரமும்,தேவசபையின் ஒழுங்கும் , வழிகாட்டுதலும் சரியாக இல்லாதபோதும் கூட அங்கேயும் பல கபடற்ற உத்தம விசுவாசிகள் உண்டு.இவர்கள் தேவனுக்கு முன்பதாகப் பிழையற்றவர்களும் பரிசுத்தமுமாய் இருப்பதால் அவர்கள் மரித்தாலும் தேவனோடு பரலோகத்திற்கு சென்று விடுவார்கள். முழுமையாக வேதசத்தியத்தை போதிக்காமல் இருக்கும் சூழலானது சீரழிவினைக் கொண்டு வரும்.

**கேள்வி :** இதில் எனது தீர்மானம் என்ன? இந்த தவறான உபதேசத்திலே இருப்பதா அல்லது இதைவிட்டு வெளியே வந்துவிடுவதா?

தவறான உபதேசங்களிலே நிலைத்திருக்கக் கூடாது.மாறாக தேவனோடு உள்ள ஐக்கியத்திலும், ஒருமைப்பாட்டிலும், விசுவாசத்திலும், தேவஆவியிலும் வளர வேண்டும்.

இப்படிப்பட்ட தவறான உபதேசங்களுக்கு செவிகொடுத்து வாழ்கிறவர்களுக்கு, தேவன்தாமே தமது அளவற்ற இரக்கத்தையும், ஞானத்தையும், தைரியத்தையும் கொடுத்து சரியான சத்தியத்திலே வழிநடத்துவாராக, ஆமென்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION



உங்களுக்குத் தெரியுமா?

## அப்போஸ்தலனாகிய பேதுருவைப் பற்றிய சில உண்மைகள்

- இவருடைய பெயர் சீமோன் இவர் யோனாவின் குமாரன்.இயேசு இவருக்கு பேதுரு என்றுபெயரிட்டார். இதன் அர்த்தம் பாறை
- இவர் கலிலேயா கடற்கரை அருகேயுள்ள பெத்சாயிதாவில் பிறந்தவர்.இவருடைய தொழில் மீன்பிடித்தல்
- இயேசுகிறிஸ்துவின் 12 சீஷர்களில் பேதுரு மாத்திரமே திருமணமானவர்
- பேதுருவின் சகோதரரான அந்திரேயா, முதலில் யோவான்ஸ்நானகனை பின்பற்றினார்.பின்னர்இயேசுகிறிஸ்துவின் முதல் அப்போஸ்தலரானார்.
- இயேசுகிறிஸ்துவிற்குப் பிறகு 64 வது ஆண்டுகளில் ரோமை ஆண்ட பேரரசர் நீரோ காலத்தில் மரித்தார்.இவர் தலைகீழாக சிலுவையிலே அறையப்பட்டு கொல்லப்பட்டார்.தாம் இயேசுவுக்காக இரத்தசாட்சியாய் மரித்ததை எண்ணி பெருமிதம் கொண்டார்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

# யோகாவாநிசி - தேவன் என் கொடி

**யாத்திராகமம் 17 : 15 மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி,அதற்கு யோகோவாநிசி என்று பேரிட்டார்**

மோசே மலையுச்சியில் தேவனுடைய கோலை தன் கையில் பிடித்துக்கொண்டு நிற்கும்போது இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியரோடே யுத்தம்பண்ணினார்கள்.மோசேயின் கைகள் அசந்து போயிற்று.ஆரோனும், ஊர் என்பவனும் அவன் கைகளைத் தாங்கினார்கள்.அப்போது இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள் இதை நினைவுகூரும்பொருட்டு, மோசே கர்த்தருக்கு ஒரு பலீபீடத்தைக் கட்டி, அதற்கு யோகோவாநிசி என்று பேரிட்டான்.இதன் அர்த்தம் தேவனே என் ஜெயக்கொடியானவர்.

போர்வீரர்கள் தங்கள் கைகளிலே பிடித்திருக்கும் கொடிக்கு பல காரணங்கள் உண்டு.ஜனங்களை அடையாளப்படுத்திக் காணவும், வழிநடத்திச் செல்லவும் பேரணியாக அணிவகுத்துச் சென்று ஜெயத்தை அறிவிக்கும் அடையாளமாகவும் பலவிதங்களில் உபயோகிக்கப்படும்.



இங்கே இஸ்ரவேல் புத்திரர்கள் தனித்தனியே யுத்தம் பண்ணவில்லை.மாறாக ஒருமித்த அணியாக திரண்டு வழிகாட்டுதலின்படி யுத்தம் பண்ணினார்கள். யோகோவா என்பதுதான் அவர்கள் கொடி.இஸ்ரவேலர்களின் யுத்தத்தின்போது தேவனாகிய கர்த்தரை யோகோவா என்றே அழைத்தார்கள்.

சிலசமயம் போரின் கிளர்ச்சியின் தன்மையைப் பொறுத்து நமது எண்ணங்களில் தவறான கண்ணோட்டமும் பின்னோக்கிய தன்மையையும் உணரலாம்.ஆவிக்குரிய யுத்தங்களிலும் கூட இதுவே உண்மை.

நம்மைச் சுற்றியிருக்கிற சூழ்நிலைகளை நாம் அதிகமாக எண்ணும்போது நாம் மனமுடைந்து துவண்டுப்போய் விடுகிறோம்.ஆனால் நம் ஜெயக்கொடியாகிய கர்த்தரை நோக்கி பார்க்க வேண்டும்.அக்காலத்திலே ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள் (ஏசாயா 11 : 10 ). அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.நம்முடைய அடையாளம் யோகோவாநிசியாகிய தேவனிடத்திலுள்ளது.அவரே நமது நோக்கம்.அவரே நமது வெற்றி.

**தொடர்புக்கு:-**
ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
2/227 - கோலார்பட்டி
பொள்ளாச்சி - வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
2/227 - Kolarpatti
Pollachi -Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha,2/227 Kolarpatti, Pollachi -Tk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316